**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை –06.**

**முன்னிலை: முனைவர்.ச.கண்ணப்பன்**

**ந.க.எண்.00768/அ1/இ1/2024, நாள்.09.09.2024**

பொருள்: தமிழ்நாடு பள்ளிக் கல்வி பணி – வகுப்பு IV–ன் கீழ் வரும் மாவட்டக்கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்த பணியிடங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு நிருவாக நலன் கருதி மாறுதல் ஆணை வழங்கப்பட்டமை – திருத்திய மாறுதல் ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை: சென்னை –06, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.00768/அ1/இ1/2024, நாள். 20.08.2024

...

பார்வையில் காணும் செயல்முறைகளில் வழங்கப்பட்ட நிருவாக மாறுதலுக்கு கீழ்க்காணுமாறு திருத்திய ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண் | மாவட்டக்கல்வி அலுவலர் பெயர் / பணிபுரிந்த அலுவலகம் | ஏற்கனவே மாறுதல் அளிக்கப்பட்ட அலுவலகம் | தற்போது திருத்திய மாறுதல் வழங்கப்படும் அலுவலகம் |
|---|---|---|---|
| 1. | திரு.என்.இரவிச்சந்திரன் மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை), கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம் | மாவட்டக்கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) கடலூர் | மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) திருச்சி, திருச்சி மாவட்டம் |
| 2. | திருமதி.பி.எஸ்.இரமா மாவட்டக்கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) தூத்துக்குடி, தூத்துக்குடி மாவட்டம் | மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை), திருநெல்வேலி மாவட்டம் | மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 3. | திருமதி.தி.கோமதி மாவட்டக்கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி), நீலகிரி மாவட்டம் | மாவட்டக்கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) திருப்பூர், திருப்பூர் மாவட்டம் | மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) கோயம்புத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம் |

மேற்காணும் திருத்திய மாறுதல் பெற்ற மாவட்டக்கல்வி அலுவலர்கள், முதன்மைக்கல்வி அலுவலர்களால் நியமனம் செய்யப்படும் பொறுப்பு அலுவலர்களிடம் தமது பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டு உடனடியாக புதிய பணியிடத்தில் பணியில் சேர வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.

த.பி.பா

தொடர்புடைய முதன்மைக்கல்வி அலுவலர்கள் பார்வையில் காணும் செயல்முறைகளில் அறிவுத்தியுள்ளவாறு திருத்திய மாறுதல் ஆணை பெற்ற அலுவலர்களுக்கு பதிலாக மாவட்டத்தில் உள்ள அரசு உயர்/ மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களிலிருந்து பணியில் மூத்த ஒருவரை பொறுப்பு அலுவலராக நியமனம் செய்து ஆணை வழங்கிவிட்டு, உரிய பின்னேற்பின் பொருட்டு கருத்துருக்களை இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பணிவிடுவிப்பு / பணியில் சேர்ந்த அறிக்கை மற்றும் பொறுப்பு ஒப்படைப்புச் சான்றிதழ் (CTC) உடனடியாக மறுநினைவூட்டுக்கு இடமின்றி இவ்வியக்ககத்திற்கும், தொடர்புடைய இயக்ககம் / முதன்மைக்கல்வி அலுவலர் / மாவட்டக்கல்வி அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பள்ளிக் கல்வி இயக்குநருக்காக

பெறுதல்
சம்மந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர்கள்
நகல்

1. சம்மந்தப்பட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்
2. சம்மந்தப்பட்ட கருவூல அலுவலர்கள் / மாவட்டக் கருவூல அலுவலர்கள்
3. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை –06
4. இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம், சென்னை –06
5. அரசு செயலாளர், பள்ளிக்கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை –09 (தகவலின் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது)